பக்கங்கள் 8

PERIODICALS DIVISION
UNIVERSITY LIBRARY

ஈழநாடு 50 சதம்
The EELANAADU

மலர் 22 வைகாசி 23 றஜப் 21 இதழ் 116
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-6-80

## இளி நொச்சியில் இக்காணிகள் பறிமுதலாகும்!

(இராமநாதபுரம்)
யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த கிளிநொச்சித் தொகுதியில் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் கொழும்பு கண்டி வீதி ஓரங்களில் அடாத்தாக பிடிக்கப்பட்டு குடியேறியுள்ள காணிகளைப் பறிமுதல் செய்வதற்கு காணி இலாகா நடவடிக்கை எடுத்துள்ளது.

இக்காணிகளைப் பறிமுதல் செய்யும் போது இக்காணிகளில் குடியிருந்தவர்களை வேறு இடங்களில் குடியமர்த்தவும் யாழ் மாவட்ட அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

# அரச ஊழியரின் லீவுகள் ரத்து!

(கொழும்பு)

**சகல அரசாங்க, கூட்டுத்தாபனங்களினதும், சபைகளினதும் ஊழியர்களின் லீவுகள் யாவும் இன்று ரத்துச் செய்யப்பட்டுள்ளது.**

நேற்றுக் கூடிய அமைச்சரவையின் வாராந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

நண்பகல் இடைவேளையின்போது வெளியே செல்லும்போதும், வேலைக்குத் திரும்பும்போதும் நேரத்தை ஊழியர்கள் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளனர். (ம-கு)

## "யாழ். நகரில் திட்டமிட்டபடி மூன்று இடங்களில் மறியல்"

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்துக்கு எதிராக இன்று நடத்தவுள்ள தேசிய எதிர்ப்பு இயக்கத்தை வடபகுதியில் வெற்றிகரமாக நடாத்த அரசியற் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் நடவடிக்கை எடுத்துள்ளன.**

வடபிரதேசத்திலுள்ள சகல பொதுமக்களையும், தொழிலாளர்களையும் இன்று கறுப்புப்பட்டிகளை அணிந்தும் கறுப்புக்கொடிகளை ஏற்றியும் தமது எதிர்ப்பைக் காட்டுமாறு வடக்கிலுள்ள பல அரசியல்கட்சித் தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நண்பகல் இடைவேளையின் போது யாழ். வீரசிங்கம் மண்டபம், யாழ். கல்வித் திணைக்களம், யாழ் செயலகம் என்பவற்றிற்கு முன்பாக அமைதியான முறையில் மறியல் போராட்டம் நடாத்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வேலைநிறுத்தம் நடைபெறுமிடத்தில் மறியல் போராட்டம் நடாத்துவது சட்டவிரோதமானது என்றும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க பொலிசார் தயங்கமாட்டார்கள் என்றும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### அரசு ஆதரவு மறியல்

அரசுக்கு எதிரான மறியல் போராட்டம் இன்று நடைபெறவுள்ள அதே வேளையில் அரசுக்கு ஆதரவான தொழிற்சங்கங்களும், அரசுக்கு ஆதரவாக சுலோக அட்டைகளைத் தாங்கி மறியல் செய்வர். நண்பகல் இடைவேளையின்போது கொழும்பில் பல கட்டடங்களும் நடத்தப்படவுள்ளன.

### திட்டமிட்டபடி நடக்கும்

திட்டமிட்டபடி இன்று பிக்கட்டிங் நடக்கும் என்று வடபகுதி தொழிற்சங்க கூட்டுக்கமிட்டி அமைப்பாளர் திரு. எஸ் விஜயானந்தன் நேற்றிரவு தெரிவித்தார்.

வடபகுதியில் வர்த்தக ஸ்தாபனங்களையும் கடைகளையும் மூடிவிடுமாறு நாம் கேட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

## 'யாழ். அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பிக்க அடுத்தவார இறுதியில் 3 அமைச்சர்கள் வருவர்''

### யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்கு அடுத்தவார இறுதியில் மூன்று அமைச்சர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள்.

யாழ். அரசாங்க அதிபரும், யாழ் மாவட்ட அமைச்சு செயலாளருமான திரு யோகேந்திரா துரைசுவாமி மேற்கண்ட தகவலை, நேற்று முன்தினம் காலை அவரது காரியாலயத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி அமைச்சர்கள் விஜயம் பற்றி மேலும் தெரிவித்ததாவது:

"இம்மாதம் 11ந் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் உள்நாட்டு அமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம் அன்று காலை பளை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தை திறந்து வைப்பார். அன்று நண்பகல் அரசாங்க செயலகத்தில் அமைச்சர் திரு தேவநாயகம் மாநாடொன்றைக் கூட்டவிருக்கிறார். 12ம் தேதி அமைச்சர்

[8-ம் பக்கம்பார்க்க]

## கமலம் கொலைவழக்கு:

## "சட்டத்தரணிகள் இல்லை நானே வாதாடுவேன்"

### 1-ம் எதிரி நீதிமன்றத்தில் கூறினர்

(யாழ்ப்பாணம்)
சட்டத்தரணி எவரையும் நான் ஏற்படுத்தவில்லை. வழக்கில் எனக்காக நானேவாதாட விருக்கிறேன்.

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் கொலைவழக்கின் 1ம் எதிரியான ராஜன் நீதிமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்றது.

சட்டத்தரணிகள் எவரும் உமக்காக ஆஜராகவில்லையா? என நீதிபதி கேட்டபோது 1ம் எதிரி, தமக்காக தாமே வாதாடப் போவதாகக் கூறினர். (க)

## பிக்கட்டிங் சட்டவிரோதம்

### சபையில் நடந்த விவாதம்

(கொழும்பு)

எஸ். டி. பண்டாரநாயக்கா: (சுதந்திரக்கட்சி மறியல் போராட்டம் (பிக்கட்டிங்) நடத்துவது சட்டவிரோதம் என்று பொலிசாருக்கு அறிவித்துள்ளீர்களா?

பிரதமர்: பொலிசார் சட்டவொச்சட்டத்தின் கீழ் இதனைத் தடுக்கப் பொலிசாருக்கு கடமை இருக்கிறது. அதைச் செய்யுங்கள் இதைச் செய்யுங்கள் என்று உத்தரவிடுபவர்கள் அல்ல நாங்கள்

ஆனந்த தசநாயக்கா: (சு. க.) அப்போ பிக்கட்டிங் நடத்துவது சட்டவிரோதமானது என்று கூறுகிறீர்களா?

பிரதமர்: நிச்சயமாக வேலைநிறுத்தம் நடைபெறும் இடத்தில் பிக்கட்டிங் நடத்துவது சட்டவிரோதமானது என்று சர்வதேச தொழிற்சங்க சம்மேளன தீர்மானம் கூறுகிறது.

திரு. ஆனந்த தசநாயக்கா: அப்படியல்ல.

பிரதமர்: நான் அந்தத் தீர்மானத்தை வாசித்துக் காட்டுகிறேன் (பிரதமர் வாசிக்கிறார்)

எஸ். டி. பண்டாரநாயக்கா: அதை நான் பார்க்கலாமா?

பிரதமர்: நான் அரசு வெளியிட்ட அறிக்கையிலிருந்து தான் வாசிக்கிறேன்.

எஸ். டி: அப்படியானால் அது உங்கள் அரசாங்கத்தின் கொள்கை. தொழில் அமைச்சரின் அறிக்கை.

பிரதமர்: அரசின் கொள்கையைத்தான் நாம் கூறுச் செய்கிறோம். நாங்கள் தான் அரசாங்கம். நாம்தான் இந்த நாட்டை ஆள்கிறோம்.

எஸ். டி: டின்பாலின் விலை ஏறிவிட்டது.

பிரதமர்: பிக்கட்டிங் செய்தால் விலை குறைந்து விடுமா? (ம-கு)

## 8 பேர் கைதாகி விடுதலை!

[யாழ்ப்பாணம்]
தேசிய எதிர்ப்புதினத் தொடர்பாக யாழ் நகரில் துண்டுப்பிரசுரங்களை ஒட்டிக்கொண்டிருந்த எட்டு இளைஞர்கள் நேற்று பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 6 இளைஞர்களும், புரட்சிகர மார்க்ஸிச கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 2 இளைஞர்களும், இரண்டு குழுக்களாக நேற்றிரவு துண்டுப்பிரசுரங்களை ஒட்டிக்கொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்த பிரசுரங்களும் பறிக்கப்பட்டன. (ம-கு)

HONDA
CD 200 NR
(PLATED MODEL)

விரைவில் பெற்றுக்கொள்ள
பதிவு செய்துகொள்ளுங்கள்.

சேகர் மோட்டோஸ்
(மக்கள் வங்கி முன்பாக)
118, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7783

(அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபன விநியோகஸ்தர்)

5953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

இறைண்டிங் மில் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை. தேவாஸ் இறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5913

மாணவர் இதழ்கள் ஏட்டிற்கு ஆக்கங்களை உடன் அனுப்பி வைக்கவும். கல்லூரிகள் தோறும் மாணவ நிருபர்கள் தேவை. தேவையான பிரதிகளுக்கு மாணவ மன்றங்கள் விண்ணப்பிக்கவும். கமிஷன் வழங்கப்படும். மாணவர் குரல், 121/A, பருத்தித்துறை வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம். 5948

### விற்பனைக்கு

24ஸ்ரீ தொடர் இலக்கமுள்ள மொறிஸ் மூக்கன் லொறி விற்பனைக்குண்டு S. இலிங்கநாதன் J. P., மணற்குடியிருப்பு, முல்லைத்தீவு. 5942

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், ஒட்டுமடம் வீதி, 15-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தவனம் கைம்பெண் குணபூசணி அம்மாள் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்-

— மரணமெய்நியவர்

பொன்னம்பலம் சண்முகநாதன் இல: 15, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.

— மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 3508

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980-ம் ஆண்டு ஆடி மாதம் 4-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு, இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1980-ஆம் ஆண்டு ஆனி மாதம் 3-ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

5947

## மூலஸ்தான விக்கிரகத்தைப் பிடுங்கிவீசினார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விடத்தல் முனை கண்ணகி அம்மன் ஆலய வைகாசிப் பௌர்ணமிச்சடங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒரு நபர் மூலஸ்தானத்தில் இருந்த அம்மன் விக்கிரகத்தை ஓடோடிச்சென்று பிடுங்கி நிலத்தில் வீசினார்.

இந்நபரின் செயலைக்கண்ட கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் உடனடியாக அவரைக் கைதுசெய்தனர் கஞ்சா கோப்பி குடித்த போதையில் காணப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது.

இச்செயலை புரிந்த நபர் மட்டக்களப்பு கல்லடித்தருவை சேர்ந்த இரா. சி. சுகுமாரன் என்னும் இளைஞன் ஆவார். இவர் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## தேசிய எதிர்ப்புத்தினத்தில் சி.பா.த.ம. சபை பங்குபற்றும்

(யாழ்ப்பாணம்)

தேசிய எதிர்ப்புத்தினம் அனுஷ்டிப்பது சரியானதும் நியாயமானதும் என, சிறுபான்மைத் தமிழர் மகாசபை பொதுச்சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்க மண்டபத்தில் திரு. மு. வடிவேலு தலைமையில் நடைபெற்ற மகாசபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பெரும்பான்மையான சிறுபான்மைத் தமிழர்கள் குறைந்த வருமானம் பெறுபவர்களாகஇருக்கின்றனர் நிரந்தர தொழிலோ, வாசஸ்தலமோ அற்றவர்களாகக் காணப்படுகின்றனர் அரசாங்கத்தின் உணவு முத்திரைத் திட்டத்தினால் யாவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். நெசவாளர், சிறுநில விவசாயிகள், சீவல்தொழிலாளர்கள் யாவரும் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுவருகின்றனர் மேலும் அத்தியாவசிய உணவுப் பொருள்களினதும் ஏனையபொருட்களினதும் விலைகள்மலைபோல உயர்ந்து காணப்படுவதினால் யாவரும் நாளாந்தம் பாதிக்கப்படுகின்றனர். அரசாங்கமோ ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. மக்களின் கஷ்டத்தை உணர்ந்ததாகவும் தெரியவில்லை.

மேலும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதிக்கும் நோக்கமாக தொழிற்சங்கங்களுக்கு எதிராகப் புதியபுதிய சட்டங்களை உருவாக்கி தொழிற்சங்கங்களை அழித்தொழிக்கும் முயற்சிலும் அரசாங்கம் ஈடுபட்டுவருகிறது. எனவே தொழிற்சங்கங்கள் யாவும் சேர்ந்து 5-ந் திகதி நடத்த இருக்கும் தேசிய எதிர்ப்பு தினத்தை மகாசபை ஆதரிக்கிறது "இவ்வெதிர்ப்புத் தினத்திற்கு ஆதரவு நல்குமெனவே தேசிய எதிர்ப்பு தினமான யூன் 5-ந் திகதி சிறுபான்மைத் தமிழர்கள் யாவரும் தமது இல்லங்களில் கறுப்புக்கொடிகளைப் பறக்கவிட்டுத் தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதோடு தொழிற் சங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் தமது பங்கை செலுத்த வேண்டும்"

முன்னாள் கல்லூரி அதிபர் திரு. வ. நிறவேலு அவர்களின் ஆத்ம சாந்திக்காகக் கூட்டத்தில் இருநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. (அ)

### சாவற்காடு கொலைவழக்கு:

## எதிரிக்கு மூன்றரை வருட கடூழியச் சிறை

(வவுனியா)

வவுனியா சாவற்காடுகொலை வழக்கில் எதிரிக்கு மூன்றரை வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76 அக்டோபர் 1ம்தேதி தம்பன் சங்கரியை கத்தியால் குத்தி கொலை செய்ததாக அன்ரனி யோகநாதன் மீது குற்றம்சாட்டப் பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் ஆஜரானார். அரசதரப்பில் அரச சட்டத்தரணி பி. அரவிந்தன் வழக்கை நடத்தினார்.

3 நாள் விசாரணையின்பின் ஜூரி சபையினர் எதிரி கைமோசக்கொலைக் குற்றவாளியெனத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதிபதி மூன்றரை வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார். (க)

### சிரமதானமூலம்

## விளையாட்டு மைதானம் சீரமைப்பு

(வண்ணார்பண்ணை)

மண்டைதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் மீண்டும் சிரமதான மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் உள்ள பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்த 200க்கும் அதிகமான தொண்டர்கள் இச் சிரமதானத்தில் கலந்துகொண்டனர் இச் சிரமதானத்திற்கான ஏற்பாடுகளை மண்டைதீவு மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் செய்திருந்தது. மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இச் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். உழவயந்திரமும், பதினொன்கு மாட்டு வண்டில்களும் இச்சிரமதானத்தின் போது பயன்படுத்தப்பட்டன. இச் சிரமதானப் பணியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கும், பொதுஸ்தாபனங்களின் தொண்டர்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மதிய உணவு வழங்கியது. இச் சிரமதானத்தின் மூலம் இவ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தின் பள்ளமான பகுதிகள் ஒப்புரவாக்கப்பட்டுள்ளன. 1967ம் ஆண்டு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கத்தினால் செய்யப்பட்ட இரண்டுநாள் சிரமதானத்தின் மூலம் இவ்வித்தியாலய விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சபையில் சிந்தியவை

**மெரில் காரியவாசம்:**
திரு. எஸ். டி. பண்டார நாயக்கா பேசிக்கொண்டிருக்கையில், அங்கத்தவரது பேச்சைக் கேட்க களைப்பாக இருக்கிறது

எஸ். டி. எதற்கு 200 ரூபா தருகிறீர்கள்?

மெரில்: இரண்டாயிரம் ரூபா தந்தாலும் இந்தப் பேச்சைக் கேட்கமுடியாது

சிறில்மத்யூ: வாரத்தில் இரண்டு நாட்கள் சோறு சாப்பிடவேண்டாம் என்று அன்று மக்களுக்கு உபதேசம் செய்துவிட்டு நீங்கள் ஹோட்டல்களில் உணவருந்தி மகிழ்ந்தீர்கள்.

சிறில்: ஸ்ராலின் பியசேகரா லூசர்களுடன் முன்னாள் பிரதமர் நடமாடிக் கொண்டிருந்த போது இந்த மக்கள் சாப்பாட்டுக்காக நாய்களுடன் போட்டிபோட்டுக் கொண்டிருந்தனர்.

சிறில்: சுதந்திரக்கட்சியின் சாசனத்தை பற்றி திரு எஸ் டி. பண்டாரநாயக்காவுக்கு எதுவும் தெரியாது. ஏனெனில் அவர் அப்போது சிறையில் இருந்தார்.

பிரதமர்: எந்தக் கட்சி [என்றாலும்] சட்டத்தை மீறி நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்குமாறு நாம் பொலி...

### வளலாய்கொலைமுயற்சி வழக்கு:

## விசாரணை நடுவில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

வளலாய் கொலை முயற்சி வழக்கில், சாட்சியமுண்பாட்டினால் விசாரணை நடுவில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76 செப்டம்பர் 13ம் தேதி சுப்பிரமணியம் துரையன், இராசேந்திரன் திரவியத்தை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம்சாட்டப் பட்டிருந்தது

எதிரிசார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணி எஸ். சுரேந்திரனின் உதவியுடன் ஆஜரானார் அரசதரப்பில் அரச சட்டத்தரணி பி. அரவிந்தன் ஆஜரானார். (க)

## சுயஉதவி மூலம் பட்டிருப்பில் 150 வீடுகள்

(மட்டக்களப்பு)

பட்டிருப்பு தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. கணேசலிங்கத்தின் சிபாரிசின் பெயரில் கோட்டைக்கல்லாற்றில் 150 வீடுகள் கொண்ட சுய உதவி வீட்டுத்திட்டம் ஒன்று தேசிய வீடமைப்பு அதிகாரசபையினரால் அமைக்கப்பட்டுவருகிறது. (அ)

## தெரிவு

(பச்சிலைப்பள்ளி)

பளை கமநலச் சேவைப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் விவசாயப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்முகமாகக் கூட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இப்பகுதியிலுள்ள பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் இக்கூட்டங்களை நடத்திவருகிறார்கள். (அ)


## சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி-80

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

"சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி"
போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் "ஈழநாடு" பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் "ஈழநாடு" பத்திரிகையில் முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்பும் படி யாழ். ரோட்டறிக் கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

✯ சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி கூப்பன் அனுப்பும் அதிர்ஷ்டசாலிகளுக்கும் அரிய மூன்று பரிசுகள்!

விரையுங்கள்!!

1-வது பரிசு ரூபா 500-00
2-வது பரிசு ரூபா 250-00
3-வது பரிசு ரூபா 100-00

முடிவு திகதி 10-6-1980

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
மா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவைப் பகுதி
பல் வைத்திய நிலையம்,
508 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவும் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் ........ சிறந்த சாரதி பெயர் ........

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்தீவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்.............................. வயது..........

விலாசம்..............................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அனந்த நாமங்களுக் குரியவன் ஆண்டவன் அனந்த உருவங்களில் அவனைத் தரிசிக்கலாம். எந்தப் பெயரில் எந்த உருவில் அவனை வணங்கி வருகிறாயோ அதன் மூலமே அவனை அடையலாம்.

—பகவான் ராமகிருஷ்ணர்

## மக்கள் கருத்து

### பாகுபாடு நீங்குமா?

உருத்திரபுரம் என்னும் கிராமம் கிளிநொச்சியின் ஒரு பகுதியாகும். இங்கு 1952-ம் ஆண்டு தொடக்கம் உருவாகி இற்றைவரை மூற்றுப்பெருது பலபூசல்களின் மத்தியில் இருபட்டுக் கொண்டிருக்கிறது மாணிக்கப்பிள்ளையார் ஆலயம். இவ்வாலயக் கும்பாபிஷேகம் நடந்து முடிந்த பின் தொடர்ந்து நடைபெறும் பூசைகளிலும் இறுதியில் இடம் பெறும் சங்காபிஷேக சடங்கிலும் கலந்து இங்கு வதியும் சுமார் 25 வீதமான இருபான்மையினருக்கு உரிமை இல்லை என்பதைக் காணுமிடத்து வேதனையாயுள்ளது.

"பெரியவன் யார் சிறியவன் யார்", என்று காட்டினுள் ஒளவை "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடினன் பாரதி. தென்னாட்டவர் போற்றும் இவனை எந்நாட்டவரும் வணங்கும் இறைவனைக் கண்ட நாயன்மார்களும் நம்மாழ்வார்களும் தீண்டாதார் பற்றி எங்கு என்ன கூறினரோ நாம் அறியோம். ஆவுரித்துத் தின்றுலவும் புலையரேனும் கங்கை வார்சடைக் கரந்தார்க்கன் பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே எனும் அப்பர் சுவாமிகளின் கூற்று இங்கு சிந்திக்கற்பாலது.

குணராசா

உருத்திரபுரம்.

### இவ்வருட அபிவிருத்தி வேலைகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடத்திற்குள் அபிவிருத்திகளை மேற்கொள்ள பிராந்திய இந்து கலாச்சார அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை அனுமதி வழங்கியுள்ளார்.

வெள்ளாங்குளத்தில் குழாய் கிணறு விவசாயத் திட்டம், பெரியமடு மேட்டு நீர்ப்பாசனத் திட்டம், மன்னாரில் பால் சேகரிப்புப் பண்ணைத் திட்டம், தலைமன்னாரில் ஐஸ் தொழிற்சாலை ஆகிய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஈ)

### மட்டக்களப்பு புதிய பஸ் நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் பஸ் நிலையத்திற்கான முதற்கட்ட வேலை முடிவு பெறுந் தறுவாயிலுள்ளது.

மட்டுநகர் முதல்வரும்பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு.செல்லையா இராசதுரையின் வேண்டுகோளின் பேரில் பாட்டாளிபுர மைதானத்தில் அமைத்து வரும் இந்த பஸ் நிலையத்திற்கான அத்திவாரக்கல் கடந்தவருடம் ஜூன் மாதம் மட்டக்களப்பு அபிவிருத்திச் சபைத்தலைவரும் ரேவியா மாவட்ட மந்திரி செல்வி.ரேணுகா ஹேரத்தினால் நாட்டி வைக்கப்பட்டது. (அ)

நாளை யாழ். நகரில் சைவமாநாடு

# மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

பேராயிரம் பரவி
வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா
அடியார்க் கென்றும்
வராத செல்வம்
வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும்
மருந்தும் ஆகித்
தீராத நோய் தீர்த்தருள
வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழுந்திடச்
சிலைகைக் கொண்ட
பெரானைப் புள்ளிருக்கு
வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள்
போக்கினேனே.

— திருநாவுக்கரசு நாயனார்

மக்களுக்கு ஒரு பொது ஸ்தாபனம் தேவை என்பதே. அதனுடன் சைவமக்களுக்கு பத்திரிகைகளும், அச்சுக்கூடமும், பள்ளிக்கூடங்களும் உள்பட்டது சைவப்பிரசங்கமும் சைவ மகாநாடுகளும் அவர்கள் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம். மகாநாட்டில் பங்குபற்றும் பெரியோர்களுக்கும் கடமைப்பட்டுள்ளோம். இந்தியாவிலிருந்து எங்கள் அழைப்பிற்கிசைந்து சமூகத்தை கொடுத்து எங்கள் மனமார்ந்த நன்றியைத்

-- சு. சிவசுப்பிரமணியம் --

(இளைப்பாறிய சட்டத்தரணி, சீவியஅங்கத்தவர், யாழ். சைவபரிபாலனசபை)

அருட்கடலாகிய ஆதிசிவ பெருமான் உலகினில் இருக்கும் எல்லாப் பிறவிகளுக்கும் காலம்தோறும் இடைவிடாமல் நன்மைகளை எக்காலமும் செய்துவருகிறார். நாயன்மார்களையும் நால்வர்களையும் தந்துள்ளார். மேலும் பெரும் மகான்களை எங்கள் ஈழநாட்டிற்காக கொடுத்துள்ளார். அப்படியுள்ளவர்களில் ஒருவராகியவர் ஸ்ரீலஸ்ரீ கந்தப்பிள்ளை ஆறுமுகநாவலராகும். நாவலர் பெருமான் அவர்கள் சைவசமயத்திற்கும், உலகப் பொது தன்மைக்கும் சிறியவர்களாகிய எங்கள் வாயால் சொல்லமுடியாத தொண்டுகளைப்புரிந்தார். பல சிறந்த யோசனைகளையும் கூறினார்கள். அப்பெரியார் உத்தமமான சிந்தனைகளையும் மனதில் வைத்திருந்தார்கள். அப்படியுள்ள சிந்தனைகளிலும் சிலது சைவ

தலையில் இருந்துவந்தது பெரியாராகிய நாவலர் பெருமான் சிவபதம் அடைந்ததற்குப்பின் அவருடைய சிந்தனையைப் பூர்த்தி செய்ய யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டது. அப்படியே இரண்டு பத்திரிகைகளாகிய இந்துசாதனமும் Hindu Orgau ஸ்தாபிக்கப்பட்டது. மற்றும் அவர்கள் சிந்தித்தவிஷயம் பல கைகூடியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் பெரியார் செய்த நன்மைகளை விபரமாய்சொல்ல அடியேன் முடியவில்லை

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் இந்துசாதனம் 'Hindu Organ' இதழ்கள் பல வருடங்களாக அரியதொண்டு தொண்டாற்றி வருகிறது. அத்தகைய தொண்டுகளில் ஒன்று வருடம்தோறும் பேரதியளவிற்கு சைவமகாநாடுகளை கூட்டி நடாத்துகிறது. அந்த சைவ மகாநாடுகளில் ஒன்று நாளைய தினத்தில் நடைபெற எல்லாம்வல்ல இறைவன் அருள் செய்துள்ளார். இந்த சைவ மகாநாட்டிற்கு சைவ மக்களாகிய நாங்கள் எங்கள் மனமார்ந்த வணக்கத்தை தெரிவிப்பது எங்கள் விசேட கடமையாகும்.

சைவமும் சைவ சிந்தனைகளும். சைவக் கொள்கைகளும் மதுவிலக்கும், சைவ உணவும், சிவவழிபாடும் எல்லா உயிர்கட்கும் காருண்யம் காட்டும் மனப்பான்மையும் மற்றும்பல உத்தமமான சமயக்கோட்பாடுகளையும், சைவ உலகமும், சமாதானத்தையும், பொது நன்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்ற உண்மையும் இந்த மகாநாடு துலக்குமாறு சிவபெருமானையும் தேவுக்களையும் பிரார்த்திப்போம். (அ)

"மன்னார் மாவட்டம்

### சகல துறைகளிலும் பின்தங்கியுள்ளது"

எம். பி. கவலை

(மன்னார்)

"இலங்கையின் எழில்மிக் காணவென தலைமன்னார் மார்க்கமாக வரும் உல்லாசப் பிரயாணிகள் இந்த வீதிகளால் சென்றுதான் மற்ற இடங்களுக்குச் செல்ல வேண்டும். இந்த வீதிகளின் சீர்கேட்டைக் காணும் உல்லாசப் பிரயாணிகள் மன்னார் மாவட்டத்தின் முன்னேற்றத்தை அறிந்து கொள்வார்கள்.

இவ்வாறு தலைமன்னார் இராமத்தில் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாது:

"மன்னார் மாவட்டம் பின்தங்கிய நிலையில் உள்ளதற்கு இப்பகுதியில் உள்ள வீதிகளே சான்று பகரும். மன்னார் மாவட்டத்திற்கு பல உயர் அதிகாரிகள் வருகிறார்கள் போகிறார்கள். அவர்கள் இங்கு வந்ததும் வீதிகளை விரைவில் சீர்திருத்துவோம். மன்னார் மாவட்டத்தை முன்னேற்றுவோம் என்றெல்லாம் சொல்லி விட்டுப் போகிறார்கள். ஆனால் வீதியைத் திருத்தவோ, வேறு முன்னேற்றங்களைச் செய்யவோ இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

"இம்மாவட்டத்தில் முன்பு கல்வி நல்ல முன்னேற்றம் அடைந்திருந்தது. இப்போது ஆசிரியர்கள் பற்றாக்குறையாலும், தரமான ஆசிரியர்கள் இல்லாததாலும் கல்வியிலும் பின்னோக்கியே செல்கிறது" இது மிகவும் கவலைக்குரியது". என்றார். (ஈ)

### ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தேசிய எதிர்ப்புத் தினத்தில் கலந்துகொள்வதென இலங்கைதமிழர் ஆசிரிய சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், தேசிய ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர கல்விச் சேவைச்சங்கம், சாங்க பொது சேவை தொழிலாளர் சங்கம், ஆசிரியர் பாடசாலை கல்வி நிறுவனங்கள் ஊழியர் சங்கம் என்பன ஏகமனதாக முடிவுசெய்துள்ளன.

அண்மையில் கொழும்பில் கூடிய மேற்படி சங்கங்களின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது.

இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள எதிர்ப்புத்தினத்தில் பங்குகொள்வதென இச்சங்கங்கள் முடிவு செய்ததைத் தொடர்ந்து இச்சங்கங்களின் யாழ் மாவட்ட கிளையினர் விடுத்துள்ள வேண்டுகோளில் பாடசாலைக்குப் போவதானால் கறுப்புப்பட்டி அணிந்து செல்லுமாறும், பிற்பகல் 3 மணிக்கு யாழ் கல்வித்திணைக்களத்திற்குமுன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதால் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஆசிரியர்களையும், மாணவர்களையும் கேட்டுள்ளனர். (கு)

### நாட்டுப் பாடல் பற்றியகருத்தரங்கு

(நெல்லியடி)

யாழ் பல்கலைக்கழகமும், கல்வித்திணைக்களமும்இணைந்து வடபகுதி தமிழாசிரியர்களுக்கு "நாட்டுப்பாடல்கள்" பற்றிய கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்து வருகின்றன

இக் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதிரு.கா. சிவத்தம்பிகவனித்து வருகின்றார் இம்மாதம் 13ம்,14ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் இக் கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது (ந)

### டீசல்,ஐஸ் தட்டுப்பாடு

(மன்னார்)

பேசாலையில் அடிக்கடி ஐஸ் டீசல்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் இப் பகுதியில் கடல் தொழில் செய்வோர் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்

இப் பகுதிக்குத் தேவையான டீசலும்,ஐஸ்கும் தனியார் வாகனங்கள் மூலம் கொழும்பிலிருந்து வருவதுதான் வழக்கமாகி விட்டது. (ஈ)

### சைவமகாநாட்டில் தமிழகப்பேராசிரியர்

### நான்கு தினங்கள் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை அகில இலங்கை சைவமாகநாடு இம்மாதம் 6ம் தேதி ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு தினங்கள் வரை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாகாநட்டில் சென்னைப் பல்கலைக்கழக சேர். எஸ். இராதாகிருஷ்ணன் பெய்யுணர்வு மேல் நிலைக்கல்வி நிறுவன துணைப்பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நிகழ்ச்சிகள் வருமாறு:

6ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணி வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் விசேட ஆராதனை 10-30 மணி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருமுறைப் பூசையும்-பாராயணமும், 11-30--12-30 புராண படனம் திருவிளையாடற் புராணம், 12 30 தேவாரம்.

தலைவர் டாக்டர் வை. இரத்தினசபாபதி மாலை 3-30—3-45 பூஜை, சாந்தி மங்கள பாடம் நியாயசிரோமணி பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள், 3-43—4-00 திருமுறை ஓதுதல் யாழ் இந்துக்கல்லூரி மாணவர்கள், 4-05—4-15 சைவ மகாநாட்டைக் குத்துவிளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தல் திரு. இராசா விசுவநாதன் யாழ். மாநகரசபைத் தலைவர் 4-15—4-45 வரவேற்புரை திரு. ஆர். என். சிவப்பிரகாசம், 4-45—6-15 தலைமைப் பேருரை. 6-15—6—55 விரிவுரை நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் சமஸ்கிருதமும் சைவவழிபாடும். 6-55—7-15 விரிவுரை பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை "நரிவிருத்த". 7-15—8-30 விரிவுரை பண்டிதை திருமதி பொன் பாக்கியம் "மேன்மை கொள் சைவம்", 8-30 தேவாரம்

8-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை

தலைவர் கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் காலை 9-00 — 9-15 பூஜை [illegible], 9-15—9-30 திருமுறை ஓதுதல் யாழ் [illegible] கல்லூரி மாணவிகள், 9-30—10-20 தலைமையுரை, 10-20—11-00 விரிவுரை திரு ச. விநாயகமூர்த்தி "உன் அடைக்கலம் கண்டாய்" 11-00—12-30 விரிவுரை டாக்டர் வை. இரத்தினசபாபதி 'திருநெறியதமிழ்', 12-30 தேவாரம்.

தலைவர் திரு. ச. செல்வராசா சைவபரிபாலன சபைத் தலைவர், மாலை 3-00—3-10 தேவாரம், 3-10—3-40 திருமுறை ஓதுதல், 3-40—3-50 தலைமையுரை, 3-50—4-20 விரிவுரை திருமதி இரத்தின நவரத்தினம் 'சைவநெறியும் சமூக நெறியும்' 4-20—5-10 விரிவுரை பண்டிதை திருமதி வசந்தா வைத்தியநாதன் 'அப்பர் அருள் விருந்து' 5-00—6-00 சைவசமயபாடப் பரீட்சை, பண்ணிசைப் போட்டிக்குரிய பரிசு வழங்கல் பண்ணிசை—தங்கப்பதக்கப் பரிசு மலேசியா டாக்டர் ஆர். ஆனந்தக்குமாரசாமியின் ஞாபகார்த்தப் பரிசு. பரிசில் வழங்குபவர்: வடமாநில வித்தியாதிபதி திரு தி. மாணிக்கவாசகர்

6-00-7-00 விரிவுரை டாக்டர் வை. இரத்தினசபாபதி "செம்மலர் நோன்தாள்", 7-15 கலை நிகழ்ச்சிகள் நாடகம்: "ஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டமை" கொக்குவில் இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி மாணவிகள். நடனம்: "ஆறுமுகமான பொருள்" வண்ணை ஸ்ரீ சண்முகானந்தா பரத நாட்டியப் பள்ளி. 8-15 - 8;30 நன்றியுரை, 8-30 தேவாரம்.

இறுதிநாளான 9ம் திகதி யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாழ் கல்வித்திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் சமயபாடக் கருத்தரங்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

காலை 9 00 மணி திருமுறை ஓதுதல். 9-05 வரவேற்புரை. 9-15-9 30 ஆரம்ப உரை திரு. தி. மாணிக்கவாசகர் வடமாநிலக்கல்வி அதிபதி, 9-30-வாழ்த்துரை திரு சு. சிவசுப்பிரமணியம் கல்விஅதிகாரி (சமயம்) யாழ்ப்பாணம் ,9-40 9-55 தலைமையுரை: திரு கு. சோமசுந்தரம் வட்டாரக்கல்வி அதிகாரி நல்லூர், 9-55-10-15 "வாழ்க்கையில் சைவநெறி"

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மட்டக்களப்பு)
கடந்தவருடம் ஜூலைமாதம் ஆறும் திகதி மட்டக்களப்பு அபிவிருத்தித்தினம் நடைபெற்றது. அன்றையதினம் பல அபிவிருத்தித் திட்டங்கள் மாவட்ட மந்திரிகளால் ஆரம்பிக்கப்பட்டன.
அத்திட்டங்கள் சில நிறைவு பெற்றுள்ளன. சில நடைபெற்றுவருகின்றன. இன்னும் பல ஆரம்பிக்கப்படாமலே அத்திவாரக் கல்லுடன் தாவில் இருக்கின்றன.

## 2 போட்டி வேட்பாளர் வெற்றி

(சென்னை)
தமிழகத்தில் உத்தியோக பூர்வ வேட்பாளர்களுக்கும் போட்டியாக தேர்தலில் குதித்த 54 போட்டி வேட்பாளர்களில் இருவர் வெற்றி பெற்றுள்ளனர்.
வெள்ளக்கோயில் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு டி. இராமசாமி, பரமக்குடி தொகுதியில் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. எஸ். சம்மந்தம் ஆகிய இருவருமே வெற்றி பெற்ற போட்டி வேட்பாளராவார்.
அ. தி. மு. க, இந்திரா காங்கிரஸ், தி. மு. க வுடன் வேறு 3 கட்சிகளைச் சேர்ந்த போட்டி வேட்பாளர்கள் இத்தேர்தலில் குதித்தனர். (இ)

## துரை இராமசாமி அ தி மு கவில் சேர்ந்தார்

சென்னை, ஜூன். 4
பெரியார் மாவட்டம் வெள்ளக்கோயில் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் போட்டி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு. துரை இராமசாமி அ தி மு கவில் சேர்ந்துகொண்டார்.
நேற்று நடைபெற்ற அ தி மு க புதிய உறுப்பினர்களின் கூட்டத்திலும் திரு. இராமசாமி கலந்துகொண்டார்.
தேர்தலில் போட்டியிட தாம் விண்ணப்பித்தபோது இந்திரா காங்கிரஸ் தம்மைப் புறக்கணித்த வேளையில் அ தி மு க தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமக்கு உரிய இடம் அளித்ததாக திரு. இராமசாமி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறினார். (இ)

மட்டக்களப்பு அபிவிருத்தி

# நிதிஒதுக்கீடு செய்தும் முன்னேற்றம் மந்தகதி

(தமிழினியவன்)

அம்பாறை மாவட்ட மந்திரி திரு. பி. தயாரத்தினவினால் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு - வேப்பவெட்டுவான் பஸ் சேவை நடைபெறுகிறது. பன்குடாவெளி மட்பாண்ட நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மரப்பாலம் பாய்பின்னும் நிலையம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. புல்லுமலை பிரசவ மனை வேலைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை.
கொழும்பு மாவட்ட மந்திரி திரு. எம். மல்லிவராய்ச்சியினால் ஆரம்பிக்கப்பட்ட மோர் சாப்பிட்டி சிறுவர் பூங்கா, தரிப்புலித்தோட்டம், மட்பாண்ட நிலையம், வவுணதீவு சிறுகைத்தொழில் நிலையம் ஆகியன பூர்த்தியாகவில்லை. மட்டக்களப்பு—கல்லடிகுடா பஸ் சேவை நடைபெறுகிறது. நெல்லிக்காடு மட்பாண்ட நிலையம் பூர்த்தியாகும் நிலையிலுள்ளது. மகிழவட்டுவான் 'பிரசவ மனை, மட்டுநகர் நவீன சந்தை, கோட்டமுனை ஆரம்பப்பாடசாலை வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை.
நுவரேலியா மாவட்ட மந்திரியான செல்வி ரேணுகா ஹேரத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு பஸ்நிலையம், சத்துருகொண்டான் நெசவுநிலையம் என்பன பூர்த்தியடையும் நிலையிலுள்ளன. புதூர்கேணி திருப்பெருந்துறை ஆரம்பப்பாடசாலை, சத்துருகொண்டான் ஆரம்பப்பாடசாலை வேலைகள், ஆரம்பிக்கப் படவில்லை.
முல்லைத்தீவு மாவட்ட மந்திரி ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூரினால் ஆரம்பிக்கப்பட்ட ஏறாவூர் பட்டினசபை, சீவல் தொழிலாளர் கைத்தொழில் நிலையம் என்பன பூர்த்தி அடையும் நிலையிலுள்ளன.
காலஞ்சென்ற மட்டக்களப்பு மாவட்ட மந்திரி திரு. எம். கனகரத்தினத்தால் ஆரம்பிக்கப்பட்ட இராசதுரைபுர விளையாட்டு மைதான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இருதயபுர பாய் பின்னும் நிலைய வேலைகள், கல்லடி அரசாங்க ஊழியர் விடுதி, ஆரையம்பதி கைத்தொழில் நிலையம், மஞ்சந்தொடுவாய் தச்சுத் தொழிலாளர் பயிற்சிநிலையம் என்பன பூர்த்தி அடையும் நிலையிலுள்ளன. புன்னைச்சோலை சலவைப்பேட்டை அத்திவாரக் கல்லுடன் உள்ளது.

இவ்வேலைகளின் நிலைமை குறித்து மட்டுநகர் முதவரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையுடன் தொடர்பு கொண்டபோது சகல அபிவிருத்தி வேலைகளுக்கும் பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அரசாங்க அதிகாரிகளிடம் இவைகளை விரைவில் ஆரம்பிக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். (வ)

## மட்டக்களப்பில் வெசாக்பண்டிகை

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் புயலின் பின்பு இவ்வருடம் வெசாக் பண்டிகை கொண்டாடப்பட்டது.
மட்டக்களப்பு போதிசாலை, இருதயபுரம் விகாரை, மட்டக்களப்பு பொலிஸ் நிலையம், சிறைச்சாலை, வைத்தியசாலை விகாரை என்பன அலங்காரப் பந்தல்களில் அலங்கரிக்கப்பட்டது.
சிங்கள மக்களின் இல்லங்கள் வர்த்தக நிலையங்களும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. (அ)

# தேசியஎதிர்ப்புத்தினத்திற் வர்த்தகர்கள் ஆதரவுதரு...

## தொ. ச. நடவடிக்கைக் குழு அறிக்...

(யாழ்ப்பாணம்)
"இன்று அனுஷ்டிக்கப்படும் தேசிய எதிர்ப்புத் தினத்தில் வர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளர்கள் தமது நிறுவனங்களைப் பூட்டியும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும் எமது நியாயமான கோரிக்கை போராட்டத்திற்கு ஆதரவு தருக"
இவ்வாறு வடபிரதேச தொழிற் சங்க நடவடிக்கைக் குழு விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது. இக்குழு சார்பில் திரு. எஸ். விஜயானந்தன் விடுத்த இவ் அறிக்கையில் மேலும் தெ... கப்பட்டுள்ளதாவது!
"ஐ. தே. கட்சி அ... சதன் மக்கள் விரோ... வடிக்கைகளுக்கு எதிர்... தெரிவிக்க விரும்பும் அ... அரசியல் கட்சிகள், ... சங்கங்கள், இளைஞ... மாணவர்கள், விவசா... மற்றும் பெண்கள் ஆகிய... அனைத்து வெகுஜன இ... களிருந்தும் தலைப்பட்ட... யிலும் இன்றைய ... எதிர்ப்புத் தினத்திற்கு ... வளிக்க அணிசேருங்கள்...
அடையாள வேலை ந... செய்தல், மதிய போ... நடவடிக்கைகளில் ... சட்டப்படி வேலை ... மதிய போசன இடை... நேரங்களில் ... நடாத்துதல், கறுப்... யேற்றுதல் போன்ற ... குந்தகமேற்படாத கருது... முறையிலாவது ...

## தமிழக சட்டசபையின் அதிமுக தலைவர் எம்.ஜி.ஆர்.


சென்னை, ஜூன் 4
அ. தி. மு. க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழக சட்டசபையின் அ. தி. மு. க. குழுத் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
தமிழக சட்டசபைக்குப் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட அ. தி. மு. க. உறுப்பினர்கள் நேற்று சென்னையில் கூடி தமது புதிய தலைவரைத் தெரிவுசெய்தனர்.
அ. தி. மு. க. சட்ட சபைக் குழுத் தலைவராகத் திரு. எம். ஜி. ஆரின் பெயரை திரு. முசிறிபுத்தன் முன்மொழிய திரு. ஆர். சௌந்தரராஜன் வழிமொழிந்தார்.
இக் கூட்டத்தில் 129 புதிய அ தி மு க உறுப்பினர்களில் 122 பேர் கலந்து கொண்டனர். இவர்களுடன் அ தி மு க சட்டமேலவை உறுப்பினர்களும் லோகசபை உறுப்பினர்களும் கலந்து கொண்ட இக் கூட்டம் சுமார் 75 நிமிடங்கள் நடைபெற்றன. (இ)

8 மாநிலங்களிலும்

## இந்திராகாங்கிரஸ் முதல்வர்கள் இன்று தெரிவு

புதுடில்லி, ஜூன். 4
நடந்து முடிந்த ஒன்பது மாநில சட்டசபைத் தேர்தல்களில் தமிழ் நாடு தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் ஆட்சியினைக் கைப்பற்றியுள்ள இந்திரா காங்கிரசின் புதிய உறுப்பினர்கள் இன்று வியாழக்கிழமை தத்தமது மாநிலங்களில் கூடி புதிய முதல்வர்களைத் தெரிவு செய்வர்.
இதே வேளையில் மாநில முதல் அமைச்சர் பதவிக்கு லோகசபை உறுப்பினர்களும் மற்றவர்களும் போட்டியிட அனுமதிக்கப்படுவர் என்று இந்திரா காங்கிரஸ் பாராளு மன்றக்குழு தீர்மானித்துள்ளது.
திருமதி இந்திரா காங்கிரஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது என இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. ஏ. ஆர். அந்துலே தெரிவித்தார். (இ)


# அறுவடை பெரு...



பயிர்ச்செய்கையில் வெற்றிகாண லங்கெம்!

காய் கறிச்செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களே, லங்கெம் பொருட்களை உங்களது தோழர்களாக்கிக் கொள்ளுங்கள். அமோக அறுவடை கிடைக்கும். உன்னத செயற்திறன் கொண்ட லங்கெம் பொருட்கள் சகல பயிர்ச் செய்கையாளரின் நம்பிக்கையையும் பெற்றுள்ளன.

லங்கெம் பொருட்கள் திடகாத்திரமான பயிர்களையும், அமோக அறுவடையையும் உறுதிப் படுத்துகின்றன.

உங்கள் பயிர்களுடன் போட்டிபோடும் களைகளை அழிக்க - லஸ்ஸோ, பிளனவின்.
பயிர்களைப் பாதுகாக்க அசொட்றீன் 60, லனேற் சுமிசைடின், டைமித்தோஏற், எல்சான், ரொக்ஸபின் ஃபொஸ்ட்றின்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...னித்திற்கு
...தரவுதருக
...குழு அறிக்கை

# "மதுரையை மீட்டுக்கொடுத்த யாழ்ப்பாண மன்னன்" பாஷையூர் விழாவில் அந்தனிசில் உரை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர்களில் பலர் மிகவும் பராக்கிரமம் வாய்ந்தவர்களாக விளங்ினார்கள். யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனான சங்கிலியின் மூதாதையரான இம் மன்னர்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் போன்று வீரதீரத்தில் சிறந்து விளங்கினர். கண்ணுச்சாமி என்ற கண்டியன் கடைசி பன்... ...தை எழுதிய பேராசிரியர் ...நாம் ... மறந்துபோய்விட்டோம்."

இவ்வாறு பாஷையூர் ...சமூக நிலைய 28வது ஆண்டு நிறைவு விழாவில் 'யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள்' என்னும் பொருள்பற்றி சிறப்புரை ஆற்றிய 'திடபொறி' ஆசிரியர் திரு. அந்தனிசில் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். ...தலைமை வகித்தார்.

திரு. அந்தனிசில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கி. பி. 1454ம் ஆண்டளவில் யாழ்ப்பாண இராச்சியத்தை மன்னன் விஜயபாகு சிங்கையாரியன் ஆண்டிருந்த வேளையிலே மதுரையைச் சந்திரசேகர பாண்டியன் ஆண்டுவந்தான். சற்றும் எதிர்பாராத விதத்தில் சத்ருப் படைகளினால் விழ்த்தப்பட்ட மதுராபுரி மன்னன் அங்கிருந்து ஓடித்தோடி யாழ்ப்பாணம் வந்து விரோதய சிங்கையாரியனிடம் அடைக்கலம் புகுந்து உதவியும் வேண்டி நின்றான். உற்ற நண்பனுக்கு உதவும் பெற்ற யாழ்ப்பாண மன்னன் விரோதய சிங்கையாரியன் சந்திரசேகர பாண்டியனின் இழ்ந்துபோன ராச்சியத்தை மீட்டுக் கொடுக்க முதல்வனாக வீரர்களோடு தலைமைதாங்கி திரண்டு மதுரைக்கு நகர்த்தி நகரைச் சுற்றிவளைத்து பரிவாரம், மழைமாரி பொழிவது போல போர்புரிந்து மதுரையை மீட்டுச் சந்திரசேகர பாண்டியனிடம் ஒப்படைத்து யாழ்ப்பாணம் மீண்டான்.

விரோதய சிங்கையாரியன் இறந்தபின் அவன் மகன் செயவீர சிங்கையாரியன் கி. பி. 1460ம் ஆண்டளவில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானான். முத்துக்களைப் பெற்ற மன்னார் யாழ்ப்பாண ராச்சியத்தின் பகுதியாகவிருந்ததால் முத்துச் சிலாபத்தில் முத்துக்குளிப்பது சம்பந்தமாகச் செயவீரசிங்கையாரியனுக்கும் ஆறுவது புவனேகவாகுவுக்கும் போர் மூளவே யுத்த சன்னத்தனாகி வெற்றிவாகை சூடினான் மன்னன் செயவீரசிங்கையாரியன்.

"இதைத் தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் இலங்கைத் தீவு முழுவதற்கும் யாழ்ப்பாண மன்னனே தனியாட்சி செலுத்தினான். அதன்பின் யாழ்ப்பாண மன்னன் செயவீரசிங்கையாரியனுக்கு நிகரொத்தாண்ட ஏழாம் பராக்கிரமவாகு பாண்டியரசனைப் பிணைநிற்கச் செய்து தன் இராச்சியத்தை மீட்டுக்கொண்டான்." (அ)

## சிவன் ஆலய உற்சவம்

[ஊர்காவற்றுறை]

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமான ஊர்காவற்றுறை "கணபதீஸ்வரம்" சிவன்கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 11ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.


# ...பெருக வருவாய் பெருகும்




ஃபங்கசைக் கட்டுப்படுத்த - டெல்சீன் - X மன்சேற் 200, பென்லேற். பயிர்களுக்கு உறுதுணையான உரவகைகள் மக்ஸிகுறெப்.

ஆகக் கூடிய சில்லறை விலை

| | | |
|---|---|---|
| மக்ஸி குறேப் | 450 மி. லீ. | ரூ. 20.00 |
| ரொக்ஸபீன் | 450 மி. லீ. | ரூ. 38.50 |
| டைமிதோ எற் | 450 மி. லீ. | ரூ. 43 50 |
| லனெற் எல் | 450 மி. லீ. | ரூ. 62.50 |
| சிமிசிடின் | 50 மி. லீ. | ரூ. 50.00 |
| அசொட்றீன் 60 | 450 மி. லீ. | ரூ. 85.00 |
| எல்சான் | 450 மி. லீ. | ரூ. 50.00 |
| பென்லேற் | 170 கி. | ரூ. 78.50 |
| டெல்சின் X | 100 கி. | ரூ. 18.75 |

விலைகள் முன்னறிவித்தலில்லாமல் மாற்றப்படலாம்.

LANKEM

# நானிலய செழிப்புக்கு - லங்கெம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 25 லட்சம் வாக்குகள் 6 மாதத்தில் 9 லட்சமாகக் குறைந்து விட்டதே!

## இது எவ்வாறு நிரந்தரம்?

### தமது பிறந்த நாள் விழாவில் கருணாநிதி

சென்னை, ஜுன் 4 நடந்த லோகசபைத் தேர்தலில் திமுகவுக்குக் கிடைத்த வாக்குகள் இருமாத காலத்திற்குள் சட்டசபைத் தேர்தலில் 9 லட்சம் வாக்குகளாக குறைந்துவிட்டன. இந்த 9 லட்சம் வாக்குகள் கூட எமக்கு எவ்வாறு நிரந்தரமாக இருக்க முடியும்?

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

**கருணாநிதியின் 57 வது பிறந்தநாள்**

திரு கருணாநிதியின் 57 வது பிறந்தநாள் விழாவையொட்டிய பொதுக்கூட்டம் ஒன்று நேற்று சென்னையில் நடைபெற்றது.

திமுகவும் இந்திரா காங்கிரசும் இணைந்து நடத்திய இக் கூட்டத்தில் திரு. கருணாநிதி மேலும் பேசுகையில் கூறியதாவது:

வெற்றி தோல்வியைக் கணித்து அதற் [illegible] கருத்தில்கொள்ளாமல் உயிர் உள்ளவரை தமிழுக்காகவும் தமிழ் நாட்டுக்காகவும் அயராது உழைப்பேன்.

[illegible] அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் நல்ல திட்டங்களுக்கு திமுக ஆதரவு அளிக்கும். தேவையில் அரசின் தீயசெயல்களைக் கண்டித்து அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**கருணாநிதி தூண்டிவிட்டான்...**

நாட்டில் ஏதாவது போராட்டம் நடைபெற்றால் அதை கருணாநிதி தூண்டிவிட்டான் என்று கூறாமல் உடனடியாக அதற்கு தீர்வுகாண முயற்சிக்கவேண்டியது புதிய அரசின் கடமையாகும்.

எமது அணிக்கு இத் தேர்தலில் கிடைத்த தோல்வியை நான் வெற்றியின்படிகளாகவே கருதுகிறேன். (இ)

# அதிமுகவுக்கு திரும்பவும் போகமாட்டேன்

சென்னை, ஜுன். 4 எக்காரணம்கொண்டும் எச்சந்தர்ப்பத்திலும் நான் அதிமுகவுக்கு திரும்பிப் போகமாட்டேன்.

இவ்வாறு முன்னாள் அதிமுக நிதி அமைச்சர் திரு. கே. மனோகரன் கூறினார்.

திமுகவிலிருந்து திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடன் வெளியேறி அதிமுகவை அமைத்து அதன் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவராக இருந்த திரு. மனோகரன் கடந்த பெப்ரவரியில் அதிமுக அரசு கலைக்கப்பட்டதையடுத்து அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் இணைந்துகொண்டதும் நடந்து முடிந்த தேர்தலில் திமுக சார்பில் மைலாப்பூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியுற்றதும் தெரிந்ததே.

சென்னையில் நடைபெற்ற திரு. கருணாநிதி பிறந்த நாள் விழாவில் பேசிய திரு. மனோகரன் மேலும் கூறியதாவது:-

அதிமுகவில் ஊழல்கள் மலிந்துவிட்டன. அதிமுகவின் கொள்கைகள் ஒன்றுக்கொன்று முரண்பாட்டுடன் காணப்படுகின்றன. (இ)

# பாகிஸ்தானில் விரைவில் பொதுத்தேர்தல்

## அதிபர் ஹக் உறுதி

இஸ்லாமாபாத், ஜுன் 4 பாகிஸ்தானில் மக்களின் ஆட்சி ஏற்படும்வகையில் விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறும்.

இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தியில் உறுதி அளித்துள்ளார்.

பாகிஸ்தான் தேர்தலை ரத்துச் செய்து 8 மாதங்களின் பின் இவர் மேற்கண்டவாறு உறுதி அளித்துள்ளார்.

தேர்தலுக்கான திகதிபற்றி அவர் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. அவர் மேலும் கூறியதாவது: பாகிஸ்தானில் தேர்தல் ரத்துச் செய்யப்பட்டதற்கு எனது அரசு பொறுப்பல்ல.

[illegible]னநாயகம் உயர்மட்டத்திலிருந்து கடைப்பிடிக்கப்படுவதில்லை. பாமர மக்களிடமிருந்தே உருவாக்கப் படவேண்டும்.

கடந்த ஆண்டு இராணுவ நீதி மன்றம் அவசியத்தின் நிமித்தம் நியமிக்கப்பட்டது. [illegible]களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அவை நியமிக்கப்படவில்லை. மக்களைப் பாதுகாப்பதற்கும் அவர்களுக்குப் பந்தோபஸ்து அளிப்பதற்குமே அவை உருவாக்கப்பட்டன.





அடங்கிய செற்திரவம்
உற்பத்தியாளர்
பேயர் ஜெர்மனி
இலங்கையில் இப்பொருள் தயாரிப்பாளர்
ஹேகெம் லிமிட்டெட்
600. யூனியன்ஸ்ரேட். கொழும்பு 14.

BAYER

குரேட்டர் 3% மணிகள்

| | | | |
|---|---|---|---|
| 500 | இராம் | ரூபா | 10'00 |
| 2 | கி. இராம் | ரூபா | 32 50 |
| 25 | கி. இராம் | ரூபா | 380 - |

உண்டேன் EC 20%

| | | | |
|---|---|---|---|
| 100 | மி. லீட்டர் | ரூபா | 15/50 |
| 200 | மி. லீட்டர் | ரூபா | 28/50 |
| 450 | மி. லீட்டர் | ரூபா | 53 50 |


# பிரிட்டனில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் துப்பாக்கி வைத்திருக்கக் கூடாது

## அரசு பணிப்புரை

(லண்டன்) இங்கிலாந்தில் உள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் சுய பாதுகாப்புக்குக் கூட துப்பாக்கிகளை வைத்திருக்கக்கூடாது என்று பிரிட்டிஷ் அரசு அறிவுறுத்தியுள்ளது.

லண்டனிலுள்ள 139 தூதரகங்களுக்கு இந்த அறிவுறுத்தல் கொண்ட கடிதங்களை பிரிட்டிஷ் அரசு அனுப்பி வைத்துள்ளது.

ராஜதந்திரிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் அரசாங்கம் சார்ந்ததே என்றும் துப்பாக்கிகளை மட்டுமே ராஜதந்திரிகள் வைத்திருக்கலாம்.

தூதரகங்களில் கைத்துப்பாக்கி அல்லது துப்பாக்கிகள் வைத்திருக்கக் கண்டால் அது பாரதூரமாகக் கருதப்படும் என்றும் பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் கூறினார். (இ)

# இந்திய - ரஷ்ய வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு

மாஸ்கோ, ஜுன் 4 இந்திய வெளிநாட்டமைச்சர் திரு பி. வி. நரசிம்மராவ் சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவைச் சந்தித்து இருதரப்பு விவகாரம், ஆப்கான், ஈரான் நெருக்கடிகள் உட்பட பல சர்வதேசப் பிரச்சினைகள் பற்றி பேச்சு நடத்தினர்.

இந்திய மாநில சட்டசபைத் தேர்தல்களில் இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்த அமோக வெற்றி பற்றியும் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் திரு. குரோமிக்கோவிடம் எடுத்துக்கூறியதாகவும் சொல்லப்படுகிறது. (இ)

# 9 மாநிலங்களிலும் இந்திரா காங்கிரசுக்கு 60 வீத வாக்குகள்

புதுடில்லி, ஜுன் 4 கடந்தவாரம் ஒன்பது இந்திய மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில் இந்திராகாங்கிரஸ் 60 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது என்று புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

2,257 தொகுதிகளில் போட்டியிட்ட இந்திராகாங்கிரஸ் 1,322 தொகுதிகளைக் கைப்பற்றியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரன் அச்சுவேலி
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-பாரதி
பூவும் பொட்டும்
(புதிய பிரதி)

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
ராமன் தேடிய சீதை
(புதிய பிரதி)

Manohara (Jaffna) Daily 5 Shows
BLAZING FLOWERS
(color) [Strictly for Adults]
A Violent Tale of Vengence and Passion

SANTHI JAFFNA Phone 7042
Daily 10-30, a.m., 2-30 4-45, 7-00 & 9-45 P.m.
LAST 2 DAYS
CORNEL WILDE—YAPHET KOTTO
'SHARKS TREASURE'
—SUSPENSE — THRILLER — COLOR—
ALSO SHOWING: Colombo Schools Cricket Match
Schools Please Contact Management For Special Shows
From 7th Clint Eastwood "THE EIGER SANCTION" (Color)

வெற்றிகரமான 16-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
தொலைபேசி: 466
வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா விஜயன் - ரதி
நிறம் மாறாத பூக்கள்
(வண்ணப்படம்)

5-வது ஜனத்திரள் வாரம்
ராணி (யாழ்நகர்)
தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-15, 7-00, & 9-45
கமலஹாசன் (இருவேடங்களில்)
ஸ்ரீதேவி மற்றும் பலர் நடித்த
கல்யாண ராமன் (கலர்)
குறிப்பு: மின்வெட்டு அமுலாகியுள்ள வேளைகளிலும் தடைகள் எதுவுமின்றி தொடர்ந்து காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30 6-00, 9-00
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
பணக்காரக் குடும்பம்
6-6-80 முதல் ஆறிலிருந்து அறுபதுவரை

லிடோ
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-லதா
ஞானக்குழந்தை

வெற்றிகரமான 7-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-அசோகன்-நாகேஷ்-ராதிகா-ஜெயச்சந்திரன்
ரசமலிங்கம்-டிங்கிரி கனகரத்தினம்- V. R. ஸ்ரீநடராசா
ரத்தத்தின் ரத்தமே
(வண்ணக் கலர்)

குறிப்பிட்ட சிலதினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
ராஜா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா - மஞ்சுளா
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்மன் கலர்)
அரிய சந்தர்ப்பம்! யாழ்ப்பாண மக்களுக்கு இதுவே கடைசி வாய்ப்பு காணத்தவறாதீர்கள்

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 23-ம் திகதி
வியாழக்கிழமை (5-6-1980)

மேடம்: அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டி வைக்கும். சிறிய விடயத்திற்குக் கூட அநாவசியமாக ஆத்திரப்படுவீர்கள். உள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றக் கூடும்.

இடபம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும் பகுத்தவர்களின் ஆதரவும் உண்டு.

மிதுனம்: கன்னல் போல் வாழ்வு கருத்தினில் காதல் மோதும் மின்னல்போல் மறையும் இன்றே வாட்டிவிடும். பிணியும் தானே.

கடகம்: சூழ்ச்சி வலை விரிப்பதற்கு எதிரிகள் முற்படுவர் மனச்சாட்சியின்படி நடந்து கொள்ளவும். வழக்கு விவகாரத்தினால் அதிகப் பணம் செலவாகும் தெய்வ நம்பிக்கை நன்று.

சிங்கம்: குழப்பமான சம்பவங்கள் இடம்பெறும். வாழ்க்கையில் பசுமை தோன்றும். களஞ்சிய வழியாலும் நன்மை வந்து சேரும். சுபதினம்.

கன்னி: தானியத்துறையில் நஷ்டத்திற்கிடமுண்டு விவசாயிகள் பாதிக்கப்படுவர் அதிக சிந்தனையின் மூலம் உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

துலாம்: இதமான வாழ்வு இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும். இறை பக்தி மேலோங்கும்.

விருட்சம்: செய் தொழில் சிறப்படையும் சீரான நிலையும் காணும் உயர் பீட ஆதரவும் உரிமையும் கிடைக்கும் இன்று.

தனு: வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல வழிகளிலும் முயற்சி செய்வீர்கள். புதுமையான செய்திக்கும் இடமுண்டு. புதிய தொழில்துறை யொன்றில் வாய்ப்புக் கிடைக்கும்.

மகரம்: கடல் தொல்லை அதிகரிக்கும். ஆதரவு கொடுத்தவரே முதுகில் கையை விரிக்கக்கூடும். வீணான சிந்தனைக்கு இடமளியாது இருக்கவும்.

கும்பம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும் மனக்குழப்பங்களினால் வேதனையடைவீர்கள். சிறிய விஷயத்திற்கும் இடமுண்டு. தெய்வ நம்பிக்கை வேண்டும்.

மீனம்: தொழில் துறையில் மதிப்புக் கிடைக்கும் வாழ்க்கையில் உற்சாகம் பெருகும். அரச யோகமும் கிடைக்கும் மன நிறைவுக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கல்வி இலாகாவின் சேவைக்கால பயிற்சிப் பிரிவினரால் கடந்த 24-ம் திகதிமுதல் 30-ம் திகதிவரை சேவைக்கால பயிற்சி வகுப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 125க்கு மேலான ஆசிரியர்கள் இவ் வகுப்பில் பங்கு பற்றினர். (அ)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
Sporting Chance

# தந்தை ஏசியதால் தனயன் தற்கொலை

[வவனியா]

வவனியா ஆண்டியா புளியங்குளத்தைச் சேர்ந்த கனிஷ்ஹாஸ் என்னும் 15 வயதுச் சிறுவன் கிருமி நாசினி அருந்தி உயிரைப் போக்கிக் கொண்டார்.

இன்னச் செங்குளம் மேற்குப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. ஐ. கார்த்திகேசு விசாரணை நடத்தினார். இறந்தவரது தந்தையான முகம்மது மஸ்தான் கனி சாட்சியமளித்தார்.

"சம்பவதினத்தன்று வயலில் ஏர் அடித்துக் கொண்டிருந்தேன். எனது மகன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் சகோதரிகளைப் போல எனக்கு உதவியாக வேலை செய்யவில்லை என்று ஏசி கோபத்தில் அவரை அடிக்க முயன்றேன். என்னிடமிருந்து தப்பிய அவர் கொட்டிலுக்கு ஓடிவிட்டார். எனது மகளிமார் இருவரும் நானும் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தோம். மூன்று மணியளவில் கொட்டிலுக்குச் சென்றபோது அங்கு கிருமிநாசினி மணம் அதிகமாக இருந்தது. ஒரு பக்கத்தில் தரையில் எனது மகன் கிடந்தார் அவரது மூக்கில் சளியும் வாயில் நுரையும் தள்ளிக் கொண்டிருந்தது அவரைத் தூக்கிக் கொண்டு கால்நடையாக வைரமைல் தூரமுள்ள வீதிக்கு வருவதற்கிடையில் அவரது உயிர் பிரிந்துவிட்டது" இவ்வாறு சாட்சியளித்த தந்தை தெரிவித்தார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# குடிப்பழக்கத்தால் குடும்பஸ்தர் தற்கொலை

(வவனியா)

"நாங்கள் திருமணம் செய்துகொண்டு 12 ஆண்டுகளாக மகிழ்ச்சியோடு இருந்து வந்தோம். எங்களுக்கு மூன்று பிள்ளைகள் எனது கணவன் ஒவ்வொரு நாளும் குடித்துவிட்டு வீட்டிற்கு வருவது வழக்கம். அண்மைக்காலமாக அதிகமாகக் குடித்துவிட்டு வரும் இவர் குடும்பச் செலவுகளைப் பற்றி எதுவும் அக்கறை கொள்வதில்லை. அதனைத் தட்டிக்கேட்டபோது தாறுமாறாக என்னை அடிக்கத் தொடங்கி விட்டார். சம்பவம் நடந்த அன்று வீட்டிற்கு வந்த அவரிடம் இவ்விதம் கண்டபடி குடித்துச் செலவழித்தால், மூன்று பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு என்னால் எப்படி வாழ்க்கை நடத்தமுடியும் எனக் கேட்டேன். சாமான் வீற்கிறவில்லை எனக்குத் தெரியும் நீ உனது வேலையைப் பார் என்று ஏசிவிட்டு வெளியில் சென்றார். சிறிது நேரத்தில் ஓடி வந்த சின்னலட்சுமி என்பவர் எனது கணவர் கிருமிநாசினியைக் குடித்துவிட்டுக் கிடப்பதாகத் தெரிவித்தார். ஓடிச்சென்று பார்த்தபொழுது உயிருக்காக அவர் போராடிக்கொண்டிருந்தார். எமக்கு எதிரிகள் யாருமில்லை. குடிப் பழக்கத்தால் ஏற்பட்ட குடும்பப் பிரச்சனையே அவர் மரணத்திற்குக் காரணம்"

இவ்வாறு அரசம்மா என்பவர் அவரது கணவன் செல்லக்குட்டி தேவராசா (33) என்பவரது மரணவிசாரணையின்போது தெரிவித்தார்.

நெடுங்கேணி பளம்பாசி என்னும் ஊரைச் சேர்ந்த செல்லக்குட்டி தேவராசாவின் மரணம் தொடர்பாக நெடுங்கேணி மரணவிசாரணை அதிகாரி திரு. நா. காராளசிங்கம் விசாரணை நடத்தினார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

முல்லைத்தீவு பொலிஸ் உத்தியோகத்தர் திரு. அ. அமிர்தலிங்கம், தனிக்கல் பகுதி கிராமசேவை அலுவலர் திரு. இராசரத்தினம் ஆகியோர் சாட்சியளித்தனர்.

# இக்கட்டிடங்களை 14-ம் திகதி சபாநாயகர் திறந்துவைப்பார்

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் பலகோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய பொலிஸ் நிலையம், விடுதி, தபால்நிலைய உதவி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் ஆகியன இம்மாதம் 14-ம் திகதி திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு. செல்லையா இராசதுரையின் அழைப்பை ஏற்று எதிர்வரும் 13, 14-ம் திகதிகளில் வருகைதரவுள்ள சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்காரினால் இக்கட்டிடங்கள் திறந்துவைக்கப்படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# சைவ மாநாடு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. க. சிவராமலிங்கம் ஆசிரியர் யாழ் இந்துக்கல்லூரி 10-15 கலந்துரையாடல் ஆரம்பித்துவைப்பவர். திரு. ச. விநாயகரத்தினம், சமயக்கல்வி ஆலோசகர் 11-15 தொகுப்புரை: பேராசிரியர் கைலாசபதி 11-50 "வழிபாட்டிற் சைவநெறி" அதிபர் வித்துவான் சைவப்புலவர் பண்டிதர் திரு. இ. திருநாவுக்கரசு சமயக்கல்வி ஆலோசகர். 11-50 கலந்துரையாடல் ஆரம்பித்துவைப்பவர் அதிபர் சைவப்புலவர் திரு மு. திருஞானசம்பந்தபிள்ளை சமயக்கல்வி ஆலோசகர், 12-30 தொகுப்புரை, பேராசிரியர் கைலாசபதி, 12-45 மதிய போசனம், 1-45 திருமுறை ஓதுதல் 2-00 தத்துவத்திற் சைவநெறி அதிபர் திரு. க. சொக்கலிங்கம் 2-20 கலந்துரையாடல் ஆரம்பித்துவைப்பவர் பண்டிதர் திரு ஏ. பரஞ்சோதி சமயக்கல்வி ஆலோசகர் 3-05 தொகுப்புரை பேராசிரியர் கைலாசபதி 4-00 சான்றிதழ் வழங்கல்.

# "ஆத்மீக வாழ்க்கையில் அடித்தளமே ஆலயங்கள்"

(வவனியா)

"தேவஸ்தானங்கள் இறைவனின் உறைவிடம், மனித ஆத்மீக வாழ்வின் அடித்தளமே ஆலயங்கள் வவனியா மாவட்டத்தில் சட்டத்தடைவரும் மட்டும் 21 தேவஸ்தானங்கள் அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது இது மக்களிடைபேதம்பொழுது சிறந்துள்ள சமய எழுச்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறது" என்று வவனியா சபங்குளம் முத்துமாரியம்மன் கோவில் உற்சவத்தில் பேசுகையில் திரு. ஏ. என். நாகராசா கூறினார்.

சமளங்குளம் தேவஸ்தானசபை அமைக்கப்பட்ட இரண்டு மாதகாலத்திற்குள் இவ்வாலயத்தைக் கட்டி எழுப்பியமைக்குப் பாராட்டுத் தெரிவித்த வித்துவான் திரு. சுப்பிரமணியம் இப்பகுதி காட்சிகள் எவ்வளவும் பொருள்பற்றி உரை நிகழ்த்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்கா



ரேடியோ அன் ரீ.வி டெக்னீஷியன்ஸ் பஸ்நிலையம் எதிர்மேல்மாடி

உங்கள் ரேடியோக்கள் டேப்ரெக்கோடர்கள் மின்சார உபகரணங்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் எதுவானாலும் உடன் சீரமைத்துக் கொள்ள,

202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


ஈழநாடு The EELANAADU 50 சதம்

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டது

(சென்னை

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நேற்று மீண்டும் திறக்கப் பட்டது.

மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து கடந்த இருபது நாட்களாக மூடப்பட்ட இப்பல்கலைக் கழகம் நேற்று திறக்கப்பட்டதுடன் அங்கு பொலிஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

நேற்று எந்தவிதமான அசம் பாவிதங்களும் ஏற்படாதவகையில், வகுப்புக்கள் அங்கு வழமையாக நடைபெற்றன. (வெ)

## இந்திராவுக்கு கருணாநிதி வாழ்த்து

சென்னை, ஜூன் 4

தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய எட்டு மாநிலங்களிலும் இந்திரா காங்கிரஸ் கட்சி அமோக வெற்றிபெற்றதைப் பாராட்டி பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். (கு)

## கந்தசாமி நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர்களின் உரிமைக்காக போராடி தனது உயிரைத் தியாகம்செய்த அமரர் கந்தசாமியின் நினைவுதினக் கூட்டம் இன்று பிற்பகல் அரசாங்க லிகிதர் சேவைச் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

மேற்படி சங்க யாழ் கிளைத் தலைவர் திரு. வே. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் த. நமசிவாயம், இ. பானுதேவன், பொன். குமாரசாமி, எஸ். ஆறுமுகம், என். கே. சுந்தரலிங்கம், எம். குமாரசாமி, என். இராசநாயகம் உட்பட பலர் உரையாற்றுவர். (வெ)

## வைரத்தோடு மோசடி: பெண் றிமாண்டில்

(கோண்டாவில்)

வைரத்தோடு மோசடி சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த பெரிய இடத்துப் பெண் ஒருவர் பொலிசில் சரணடைந்துள்ளார்.

இம் மோசடி சம்பந்தமாக மானிப்பாய் கனகசபை வீதியைச் சேர்ந்த தேசம் மாகப்பிரமணியம் என்பவர் கடந்த பெப்ரவரி மாதம் 17ம் திகதி ஆனைக்கோட்டைப் பொலிசில் புகார் செய்துள்ளார். அப்புகாரில் கூறப்பட்டிருந்தாவது:

"என்னிடம் 20 ஆயிரம்ரூபா பெறுமதி வாய்ந்த வைரத்தோடு ஒன்று இருந்தது. அதே போன்ற ஒரு தோட்டைச் செய்ய விரும்புவதாகவும், அதனை எனது தோட்டைத்தரும் படியும் அதைப்பார்த்துவேறு தோடு செய்து விட்டுத்திருப்பித் தருவதாகவும் சுவாமினி குமாரசாமி என்பவர் என்னிடம் கேட்டார். நான் எனது தோட்டைக் கொடுத்தேன். பின் எனது வைரத்தோடு போன்ற போலித்தோடு ஒன்றைத்தந்து ஏமாற்றிவிட்டார்"

ஆனைக்கோட்டைப் பொலிசாரால் தேடப்பட்ட பிரஸ்தாப பெண் ஆனைக்கோட்டைப் பொலிசுக்குச் சென்று சரண் அடைந்ததை அடுத்து நீதிபதி திரு. ரி. யோகநாதன் முன்னிலையில் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இம் மாசம் 6ம் திகதிவரை அவரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர் ஏற்கனவே 24 ஆயிரம் ரூபா பெறுமதியான வைரத்தோடு ஒன்றை வேறொரு பெண்ணிடம் வாங்கி மோசடி செய்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## அரசுக்கு எதிராக..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதாகவும் அவர் கூறினார்.

### வேலை நிறுத்தம்

சீநோர், சாமுவேல் அன்சன்ஸ், வல்லை நெசவாலை போன்ற தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தம் நடைபெறும் என்றும் திரு. விஜயானந்தன் கூறினார். (கு)

## அடுத்தவார...

(1ம் பக்கத் தொடர்ச்சி)


திரு. தேவநாயகம் ஊர்காவற்றுறை வாடிவீட்டைத் திறந்து வைப்பார்.

இம்மாதம் 12ம் தேதி மாலை விவசாய பதில் அமைச்சர் திரு. கே. டி. எம். சி. பண்டார யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார். 13ம் தேதி மாலை அரசாங்க செயலகத்தில் நடைபெறும் மகாநாட்டில் அமைச்சர் பண்டாரா கலந்துகொள்வார். மாலை திருநெல்வேலி விவசாய நிலையத்தைப் பார்வையிடுவார். 14ம் திகதி கிளிநொச்சி செல்வார்.

இம்மாதம் 19ம் தேதி கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் யாழ்ப்பாணம் விஜயம் செய்வார். அன்று திருநெல்வேலியிலுள்ள பால் சேகரிப்பு நிலையத்தை திறந்து வைப்பார். அன்று மாலை அச்சுவேலியில் கைத்தொழில் மூலம் கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையத்தை திறந்துவைப்பார், அன்று கஸ்தூரியார் வீதியில் 'லக்சலா' கிளையை அமைச்சர் திறந்துவைப்பார். அன்று மாலை, நகைவேலை உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிலையத்தையும் அமைச்சர் திறந்துவைப்பார்.

20ம் தேதி மாலை புங்குடுதீவில், நுண்கலை மத்தியநிலையத்தையும் அமைச்சர் எனது வைபவத்துக்கோவை ஏற்று திறந்து வைப்பார். அன்று வேலணை சாந்தி விழாவிலும் அமைச்சர் கலந்துகொள்வார்.

அமைச்சர்களை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருவதாகவும் ஒரேவாரத்தில் மூன்று அமைச்சர்கள் அபிவிருத்தி வேலைகளுக்காக வருவது இதுதான் முதல்முறை என்றும் கூறி... [உ-கு]




## மீன் தூள் விற்பனை

கோழித்தீன் மிருக உணவு தயாரிப்பதற்கு தேவையான நல்ல ரக மீன்தூள் (Fishmeal) எம்மிடம் விற்பனைக்கு உண்டு. 50 கிலோகிராம் ரூபாய் 400/- தேவைக்குஉடனே தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல: 7420.

தலைவர்,
வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
25, மூன்வீதி,
யாழ்ப்பாணம்.

5954


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஆல் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜூன் 5ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. CE/8948/ 78. The Eelanaadu, Post Box No. 49, Telegram: "Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org